(ஆ) மன்னார்குடி, ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளியை மூடிவிட நிர்வாகி அளித்துள்ள நோட்டீசும், அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் இடையே ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து

*திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் உள்ள ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளியை 1-6-1978 முதல் மூடிவிட நிர்வாகி அளித்துள்ள நோட்டீசின் விளைவாக ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து'' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் மன்னார்குடி நகரத்தில் உள்ள ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப் பள்ளி நிர்வாகி, அப்பள்ளியை 1—6—1977 முதல் மூடிவிடுவதாக, அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 29—3—1977 அன்று அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்து விட்டு, முதன்மைக் கல்வி அலுவலரிடம், பள்ளியை 1—6—1977 முதல் மூடுவதற்கு அனுமதி கேட்டிருந்தார். தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்டம் 1973, பிரிவு 29, விதி 20-ன் படி பள்ளி நிர்வாகி ஆறு மாதங்களுக்கு முன்னரே பள்ளியை மூடுதல் குறித்து அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கல்வி அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும். மேலும் அந்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தல் வேண்டும். மேலும் மேற்கூறிய சட்டத்தின்படி, பள்ளியை மூடுவதாய் இருந்தால் பள்ளி ஆண்டு முடிந்த பின்னர்தான் மூடுதல் வேண்டும். மேற் சொன்ன பள்ளி நிர்வாகி 1—6—1977 முதல் பள்ளியை மூடுவதாயிருப்பின், அவர் 1—12—1976-லேயே கல்வித்துறைக்கு தெரியப்படுத்தியிருத்தல் வேண்டும். ஆனால், அப்பள்ளி நிர்வாகி பள்ளியை முடுதல் குறித்து 29—3—1977 அன்றுதான் தெரிவித்துள்ளார். மேலும், இவர் கொடுத்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு என்ன மாற்று ஏற்பாடுகள் செய்துள்ளார், என்பதனையும் தெரியப்படுத்தவில்லை. எனவே, இவருக்கு இப்பள்ளியை 1—6—1977 முதல் மூடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இப்பள்ளி 20—6—1977 அன்று மீண்டும் திறக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆனால் இப்பள்ளியின் நிர்வாகி பள்ளியை 1—6—1978 முதல் மூட இருப்பதாக 1—6—1977 அன்றே மீண்டும் தஞ்சை மாவட்டம் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளார். இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களை அண்மையில் உள்ள பள்ளிகளில் சேர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். இப்பள்ளியை 1—6—1978 முதல் மூடுவதற்கான நிர்வாகியின்

அறிவிப்பு முதன்மை கல்வி அலுவலரின் பரிசீலனையில் இருக்கிறது. முறை கேடாக நடத்தப்படும் தனியார் பள்ளிகளை அரசே, தற்காலிகமாக ஏற்று 5 ஆண்டுகளுக்கு தொடர்ந்து நடத்தி, பின்னர் தனியார் நிர்வாகத்திற்கு திருப்பி கொடுக்க, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்டம் 1973, பிரிவு 34-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தனியார் பள்ளிகளை அரசே நிரந்தரமாக எடுத்து நிர்வகிக்க விதிகளில் இடமில்லை. இவ்வாறு இப்பள்ளியை 5 ஆண்டுகளுக்கு அரசே எடுத்து நடத்துதல் இயலாது. ஏனெனில் மற்ற தனியார் பள்ளிகளுக்கு இது ஒரு முன் மாதிரியாக ஆகிவிடும். மேலும், இந்நிர்வாகம் பள்ளியை முடிவிடுவதாகவே முடிவெடுத்துள்ளது.

ஆரம்பக் கல்விக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியது, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி மன்றங்களின் கடமையாகும். எனவே, இப்பகுதியில் நகராட்சி பள்ளி ஒன்று திறக்கும்படி மன்னார்குடி சிறப்பு அலுவலரை கேட்கப்பட்டது. நிதி வசதியின்மை காரணமாக அப்பகுதியில் நகராட்சி பள்ளி தொடங்க இயலாதென நகராட்சி சிறப்பு அலுவலர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் புயல் மற்றும் வெள்ளத்தின் காரணமாக இப்பள்ளியின் கட்டிடம், கூறை முதலியன பெரும் சேதமடைந்ததினால் இப்பள்ளி 16—1—1978 முதல் தொடர்ந்து நடைபெறவில்லை. இப்பள்ளியை தொடர்ந்து நடத்துதற்கும், நிர்வாகச் சீர்கேடுகளைத் தீர்க்கக் கோரி மாவட்டக் கல்வி அதிகாரி வெளியிட்ட ஆணைகளை, நிர்வாகம் ஏற்று செயல்படவில்லை. நகராட்சிகளுக்கு அரசால் கல்வி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நிதி வசதியின்மை காரணமாக இப்பள்ளியை நகராட்சி எடுத்தோ, அல்லது புதிதாக அப்பகுதியில் ஆரம்பிக்கவோ, இயலாதென்பது சரியல்ல. எனவே, நகராட்சியே இப்பள்ளியினை எடுத்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடர்பாடு இல்லாமல் நடத்தும்படி, நகராட்சி ஆய்வாளருக்கு அறிவுரை வழங்குமாறு, பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினை கேட்டுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையிலே இந்தப் பள்ளியின் நிர்வாகி எவ்வளவு குழப்பங்களை விளைவித்திருக்கிறார் என்பது தெளிவாக இருக்கிறது. புயலால் விழுந்த பள்ளிக்கட்டிடம் இன்னும் கட்டப்படவில்லை. இதிலுள்ள பிள்ளைகள் 750 பேர் தெருக்களிலும் சத்திரங்களிலும் இருந்து படிக்கிறார்கள். இதற்கிடையிலே இதன் நிர்வாகத்தினர் பள்ளியை மூடிவிடுவதாகவும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இந்தப் பள்ளிக்கூடம் இருக்கக்கூடிய

இடத்தை எடுத்து, அல்லது அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து எடுக்கவும், விழுந்த பள்ளிக்கட்டிடத்தை கட்டவும், இந்த பள்ளிக்கூடம் தொடர்ந்து நடக்கவும், இதிலுள்ள 25 ஆசிரியர்கள், பயிலுகிற 750 மாணவர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் துரிதமாக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பள்ளியின் நிர்வாகியின் நடவடிக்கையின் விளைவாக, விழுந்த பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. இதிலுள்ள மாணவர்கள் சத்திரங்களிலும் பல வீடுகளிலும் சென்று பயிலக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதில் துரிதமாகவும், விரைவாகவும் நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும். அவ்விதம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது ஆரம்ப கல்வியைச் சேர்ந்த பள்ளியாக இருப்பதால் நகராட்சி இதை எடுத்து நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே, அரசாங்கம் இதில் ஆவன செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அடுத்து. அரசினர் சட்ட முன்வடிவுகள், தமிழ்நாடு 1978-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன் வடிவு. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்,

திரு. சி. கோவிந்தராஜன்; பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் இங்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சில சலுகைகளை வழங்கினார்கள். அதிலே காம்பன்ஸேஷன் அலவன்ஸ் பற்றியும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்னை எந்த நேரத்தில் எழுப்புவது என்றிருக்க வேண்டும். ஒரு அமைச்சரை நான் பேச கூப்பிட்டதற்குப் பிறகு இதை எழுப்புவது சரியல்ல. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்கள்.

(7) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன் வடிவு.

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR : Sir, I Move; "That leave be granted for the introduction of the Tamil Nadu debt Relief Laws (Second amendment) Bill, 1978."